APRIL/MAY 2024

FTA42/BTA42/CTA42 — இலக்கணம் – 4
தண்டியலங்காரம்

Time : Three hours Maximum : 75 marks

RAMNAD INDUSTRIES ARTS & SCIENCE COLLEGE LIBRARY

பகுதி அ — (10 × 2 = 20 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடையளி.

1. அணிகளில் தாய் அணி என்ற சிறப்பிற்கு உரிய அணி யாது?

2. தண்டியலங்காரம் சுட்டும் தன்மை அணி நூற்பாவைச் சுட்டுக.

3. உருவக அணியின் இலக்கணம் சுட்டுக.

4. விலக்கணி எத்தனை வகைப்படும்?

5. வேற்றுப்பொருள் வைப்பணி வகைகளில் எவையேனும் நான்கின் பெயர்களைச் சுட்டுக.

6. விபாவனை என்ற சொல்லின் பொருள் கூறுக.

7. குறிப்பு வெளிப்படுத்தும் சத்துவம் பிறிதின் மறைத்து உரையாடல் எவ்வணி?

8. உள்ளத்தில் எழும் நிகழ்வுகளை மிகைப்படுத்திக் கூறுவது எவ்வணி?

9. பொருள் பரிமாறுதல் எவ்வணி?

10. பாவிகம் என்பது யாது?

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடையளி.

11. (அ) உவமை அணியின் பொது இலக்கணம் சுட்டுக.

(அல்லது)

(ஆ) உவமை அணியின் வகைகள் எவையேனும் மூன்றினைச் சான்றுடன் விளக்குக.

12. (அ) உருவக அணியின் எவையேனும் மூன்று வகைகளைச் சான்றுடன் புலப்படுத்துக.

(அல்லது)

(ஆ) பின்வரு நிலையணியின் இலக்கணம் சுட்டி சான்று தருக.

13. (அ) தற்குறிப்பேற்ற அணி சான்றுடன் விளக்குக.

(அல்லது)

(ஆ) வேற்றுமை அணியின் இலக்கணம் கூறி சான்றுடன் புலப்படுத்துக.

14. (அ) நுட்ப அணியினைச் சான்றுடன் விளக்குக.

(அல்லது)

(ஆ) சமாயித அணியைச் சான்றுடன் புலப்படுத்துக.

15. (அ) ஒப்புமைக்கூட்ட அணியைச் சான்றுடன் விளக்குக.

(அல்லது)

(ஆ) நிதர்சன அணி என்றால் என்ன? சான்று தருக.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடையளி.

16. தன்மையணியின் வகைகளைச் சான்றுடன் தெளிவுறுத்துக.

17. தீவக அணியின் இலக்கணம் சுட்டி வகைகளைச் சான்றுடன் கட்டுரைக்க.

18. அதிசய அணி குறித்துக் கட்டுரைக்க.

19. சுவையணியின் இலக்கணம் சுட்டி வகைகளைச் சான்றுடன் விவரிக்க.

20. சிலேடை அணியின் இலக்கணம் சுட்டி வகைகளைத் தெளிவுறுத்துக.

———————